**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.672/2026**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw3/Pw3 |
| Name | : ரஞ்ஜித்குமார் |
| Father/Husband's Name | : ராஜேந்திரன் |
| Village | :செங்கல்பட்டு |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 39 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03.06.2026.

Accused present.

**முதல் விசாரணை:**

நான் ரயில்வே கேண்டினில் வேலை செய்து வருகிறேன். கடந்த பிப்ரவரி மாதம 2026 ல் மாலை 6.30 மணியளவில் நான் செங்கல்பட்டு ே◌ஹாம் சிக்னல் அருகே தண்டவாளத்தில் நடந்து சென்று கொண்டிருக்கும் போது ஆஜர் எதிரி கல்லை எடுத்து ரயில் மீது அடித்துக்கொண்டிருந்தார். நான் உடனே ரயில்வே போலீசாரிடம் தகவல் சொன்னேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த முதலாவது கையெழுத்து **அதசா.ஆ. 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

## குறுக்கு விசாரணை

1. நான் ரயில்வே கேண்டினில் டீ விற்று வியாபாரம் செய்து வருகிறேன். காலை 7.30 மணியிலிருந்து இரவு 8.30 மணி வரை டீ வியாபாரம் செய்து வருவேன். சம்பவ இடத்தில் ஆஜர் எதிரி மட்டும் தான் இருந்தாரா அல்லது அவருடன் மற்ற நபர்கள் இருந்தாரகளா என்றால் அந்த தண்டவாளத்தை தாண்டி நிறைய நபர்கள் செல்வார்கள் ஆனால் ஆஜர் எதிரி மட்டும் தான் கல்லை எடுத்து எரிந்து கொண்டிருந்தார். அவருடன் வேறு யாரும் இல்லை. அவர் எந்த ரயிலில் கல்லை எறிந்தார் என்று எனக்கு தெரியாது. திருப்பதி வண்டி 5.45 மணிக்கு ரயில்வே ஸ்டேசனுக்கு வரும். அப்போது ஆஜர் எதிரி மது போதையில் இருந்தார். அவர் என்ன உடை அணிந்திருந்தார் என்றால் மஞ்சள் நிற சட்டை அணிந்திருந்தார் மற்றும் சாட்ஸ் அணிந்திருந்தார்.

2. நான் 10 அடி தூரத்தில் இருந்து ஆஜர் எதிரியை பார்த்தேன். சம்பவ இடத்திற்கு நான் எதற்காக சென்றேன் என்றால் அருகில் இருக்கும் கோயிலுக்கு சர்க்கரை வாங்குவதற்காக சென்றுவிட்டு திரும்பும் போது ஆஜர் எதிரியை பார்த்தேன். போலீசார் என்னை விசாரிக்கும் போது 5-6 நபர்களை நிற்க வைத்து ஆஜர் எதிரியை அடையாளம் காட்ட சொன்னார்களா என்றால் இல்லை. நான் கையெழுத்து போட்ட ஆவணத்தில் என்ன எழுதி இருக்கிறது என்று எனக்கு தெரியுமா என்றால் நான் அதை படித்து பார்க்கவில்லை, ஆஜர் எதிரி கல் எடுத்து அடித்ததாக சொல்லப்பட்டிருந்தது என்று சொன்னார்கள். நான் காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். இரவு நேரம் என்பதால் நான் எதிரியை பார்த்திருக்க வாய்ப்பு இல்லை என்றாலும் ஆஜர் எதிரிக்கு குடிபழக்கம் இல்லை என்றாலும், போலீசார்

கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவருக்கு அனுசரனையாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu

**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.672/2026**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw4/Pw4 |
| Name | : ஜெயபிரகாஷ் |
| Father/Husband's Name | : அருள் |
| Village | :செங்கல்பட்டு |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 30 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03.06.2026.

Accused present.

**முதல் விசாரணை:**

நான் ரயில்வே கேண்டினில் வேலை செய்து வருகிறேன். கடந்த 2026 ல் தேதி மாதம் ஞாபகம் இல்லை. இரவு நான் சாப்பிடுவதாற்காக ஜெயம் ேஹாட்டலுக்கு சென்ற போது செங்கல்பட்டு ரயில் நிலையத்தில் தண்டவாளத்திற்கு அருகே ஆஜர் எதிரி மற்றும் மற்றொரு நபர் இருந்தார்கள். அதில் ஆஜர் எதிரி கல் எடுத்து விழுப்புரம் நோக்கி செல்லும் ரயிலை பார்த்து கல் எடுத்து அடித்தார். நான் அதன் பிறகு ரயில்வே போலீசாரிடம் தகவல் சொன்னேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த இரண்டாவது கையெழுத்து **அதசா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

## குறுக்கு விசாரணை

நான் ரயில்வே கேண்டினில் டீ மாஸ்டராக பணிசெய்து வருகிறேன். காலை 6.00 மணியிலிருந்து இரவு 8.00 மணி வரை டீ வியாபாரம் செய்து வருவேன். சம்பவ இடத்தில் ஆஜர் எதிரி மற்றும் இருந்த மற்றொரு நபர் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. ஆஜர் எதிரியை இரவு 7–8 மணியளவில் பார்த்தேன். பார்வை மகசர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையெழுத்துகளில் வேறுபாடு உள்ளது என்றால் இல்லை இரண்டும் என்னுடைய கையெழுத்து தான். நான் சம்பவ இடத்தில் எதிரியை பார்ப்பதற்கு வாய்ப்புகள் இல்லை என்றாலும், எதிரியை பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அப்போது ஆஜர் எதிரி மது போதையில் இருந்தார்.

மறுவிசாரணை இல்லை

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu